TEJAS Thiagarajar College Journal ISSN (Online):2456-4044
June 2017, Vol 2(2), PP 01-12

# வாழுகின்ற மக்களுக்கு வாழ்ந்த பாடம் - வ.சுப.மாணிக்கனார்

முனைவர் இராம. மலர்விழிமங்கையர்க்கரசி

துறைத்தலைவர் & தமிழ்த்துறை , தியாகராசர் கல்லூரி, மதுரை - 09.

அ. வ.சுப.மாணிக்கனாரின் படைப்புகள் (அ) ஆராய்ச்சி நூல்கள் (15)

(வள்ளுவம் தொடங்கி தொல்காப்பியத் திறன் வரை)

ஆ. நாடகங்கள் (4) மனைவியின் உரிமை முதல் ஒரு நொடியில் வரை)

இ. கவிதைகள் (3) கொடை விளக்கு முதல் மாணிக்கக்குறள்

ஈ. உரை (3) தொல்காப்பியம், திருக்குறள், கம்பர் நாற்பது

உ. ஆங்கில நூல்கள் (4)

1. The Tamil Concept of love
2. A Study of tamil verbs
3. Collected papers
4. Tamilalogy

ஊ. பிற வகை (3)

என மொத்தம் (32) முப்பத்திரண்டு நூல்கள். அவற்றுள் தற்சிந்தனைகள், எனும் நூல் மட்டுமே முழுமையாக ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

வ.சுபமாணிக்கனாரின் தற்சிந்தனைகள், தேவையானவையா, நற்சிந்தனைகளா என்ற வினாவிற்கு விடைகாணுமுகத்தான், "வாழுகின்ற மக்களுக்கு வாழ்ந்தவர்கள் பாடம்" என ஆய்ந்து கூறுவதாகக் கட்டுரை அமைப்பதா? என எண்ணிய போது நூற்றாண்டு விழாக் குழுவினர் கேட்டுக் கொண்டதற்கிணங்க "மாணிக்கனார் சுட்டிய தமிழ், தமிழினம், தமிழகம் என்ற கருத்தினை ஒட்டிக் கட்டுரை வழங்குமாறு செய்திவிடுத்ததனால் அதனையொட்டியே கட்டுரை அமைகிறது.

## *வ.சுப மாணிக்கனார் நூற்றாண்டு வெளியீடு*

“தற்சிந்தனைகள் [15.08.1982 - 1

- வ.சு.ப.மாணிக்கனார் 14.04.1989 -74 ] 74 நாட்டுகுறிப்புகள் ஏழு ஆண்டு

தமிழ் மண் பதிப்பகம் - சென்னை -17

முதல் பதிப்பு -மார்ச் 2016

பதிப்புரிமை -ஆசிரியருக்கு ( 24-04-1989-ல் மறைந்தவர்)

**நூலின் நுழைவுரை (புதுமையாய் வரவேற்கிறது)**

“அங்கிங்கெனாதபடி அனைத்து மட்டடங்களிலும் ஆதிக்கம் செலுத்தும் ‘பொய்மை” யோடு, சில நேரங்களில் சமரசம் செய்து கொள்ள வேண்டிய நெருக்கடி நேர்ந்திருக்கிறது சான்றோர் பெருமக்கட்கு.

வாழ்வாதாரத்தையே அசைத்துவிடும் எனத் தெரிந்தும் வாய்மையையே தன் வாழ்வு நெறியாக வரித்துக் கொண்டு வறுமை சுமந்த மாமனிதர் வ.சுப.மாணிக்கனார், எந்தக் கட்டத்திலும் சமரசத்திற்கு இடம் தராதவர்.

புறப் போராட்டங்களில் கொண்டிருந்த தீவிரத்தை அகப் போராட்டங்களிலும், அடிநாதமாய் அமைத்துக் கொண்டு, தன்னெஞ்சறிவதாய்ப் பொறித்துவைத்த அவர்தம் புடம் போட்ட பொற் சிந்தனைகளின் தொகுப்பே “தற்சிந்தனைகள்” மனித வாழ்வின் அனைத்துப் பரப்பிலும், உள்ளத்தின் குறை நிறைகளின் அப்பட்டமான அலசலை நிகழத்துவதோடு ஆக்கப்பூர்வமான மறு உருவாக்கத்திற்கும் அடித்தளம் அமைத்து உதவுகிறது. - வ.சுப.மாணிக்கனாரின் மக்கள்.

1982ம் ஆண்டு விடுதலை நாளில் எழுதி தொடங்கி, தன் உயிர் விடுதலை நாள் வரை தொடர்ந்த இந்த “தற்சிந்தனைகள்” முப்பதாண்டு இடை வெளிக்குப் பின் அச்சாக்கம் பெற்று, சமூக வெளியைச் சந்திக்க வருகிறது.”[1] தற்சிந்தனைகள் - பக் - 3

என்ற உரைகளோடு வாசிப்பவர்க்கு இந்த நூல் தன்னை அறிமுகம் செய்து கொள்கிறது. [1]

*வாய்மையே வாழ்க்கை நெறி :-*

காந்தியடிகளும், வள்ளுவருமே மாணிக்கனாரை வாய்மையாளராக வடிவமைத்திருக்கிறார்கள். எனவே தான் வாய்மையை வாழ்வு நெறியாக வகுத்துக் கொண்டிருக்கிறார்.

“இன்று பெருமகன் காந்தியடிகள் பிறந்த நாள். நூற்றுப்பதின் மூன்றாவது ஆண்டுப் பிறப்பு இது காறும் உலகத்தாய் பெற்றெடுத்த சிறந்த முதல் மகன் காந்தியடிகளே. இன்று சில எண்ணங்களை வலுவாக எண்ணுகின்றேன். என் வாய்மை வாழ்க்கைப் பேரியக்கமாகவும் பெரும்தொண்டாகவும் உலகப் பரப்பகாவும் விரிய வேண்டும், இந்நோக்குப் பற்றிச் சிந்தனைகள் என் நெஞ்சிடையேகுகின்றன. இன்று முதல் அழுத்தமாகக் கடைபிடிக்க வேண்டிய ஓரிரு நெறிகள், என் உள்ளம் முழுத் தூய்மைப் பெறவில்லை, மாசுகள் வளரும் நிலைகுறைய வில்லை. செயலாகும் மாசுகளாக இல்லாவிட்டாலும் மாசுப்படிவு கூடாது”. (4)

வள்ளுவத்தின் படி வாழ்க்கையமை வேண்டும் என்பது அவரின் வைராக்கியமாக. அமைந்திருக்கிறது.

*தமிழுக்காகத் திட்டமிட்டு/ ஐந்தாண்டுத் திட்டமிட்டு செயலாற்ற எண்ணியவர்:*

எழுதுத் திட்டங்கள் வியப்பை ஏற்படுத்துகின்றன. “இன்னும் இருபதாண்டு காலம் (எழுதும் நாள் 15.01.1984) என் எண்பத்தேழாண்டு வரை அல்லது தொண்ணூராண்டு வரை ஆற்றலொடும் வளர்ச்சியொடும் ஆக்கமாகச் செயல்பட முடியும் என்ற துணிவெண்ணத்தால் என் திட்டங்களைச் செவ்வனே

படைத்துக் கொள்வேன். நான்டு கட்டங்களாக நான்கு ஐந்தாண்டுத் திட்டங்களாக வகுத்துக் கொள்வேன் 1988,1993,1998, 2003 என்ற ஆண்டுக் கணக்கில் என் திட்ட வரிசைகள் அமையும் ….. என்திட்ட மெல்லாம் பெரும்பாலும் எழுத்துப் படைப்பாகவும் எழுத்தியக்கமாகவுமே அமைய முடியும் தமிழ்ப் பல்கலைக்கழகம் சார்பில் தொல்காப்பியத் தகைஞர் என்ற பேராசிரியத் தகைமையை ஏற்றுக் கொண்டு "தொல்காப்பிய பேருரை -மாணிக்கம்" எழுதி வருகிறேன். இது பெரும் பொறுப்பும் பேராய்வும் கொண்டபணி. குறித்த ஈராண்டில் முடிக்க விழைகிறேன். தமிழ் மானம் என்ற தலைப்பில் அந்தாதிக் குறளாக தமிழ் மொழி, தமிழினம், தமிழ்நாடு குறித்துப் பாடி வருகின்றேன். இது சில திங்களில் முடியலாம்" என்கிறார்.

வ.சுப.மாணிக்கம், தற்சிந்தனைகள் - பக் 42 & 43

ஆனால் இவை அனைத்தையும் நடைமுறைப்படுத்த வியன்றதா எனில் முதல் ஐந்தாண்டு நிறைவுற்ற அடுத்த ஐந்தாண்டின் தொடக்கம் காலன் வகுத்தக் கடைசியாண்டானது. அவரது மறைவு 24.04.1989 -அன்று நிகழ்ந்தது.

*தமிழ் பொன்னம்பலம் ஏறப் பணியாற்றியமை* :-

தமிழ்ப்பாசுரங்கள் சிதம்பரம் நடராசர் கோயிலில் பொன்னம்பலத்தில் ஓதப்பெற வேண்டும் என்ற வேண்டுகோளைப் பலருடனும் சேர்ந்து தீட்சிதச் செயலாளர்களிடம் கொண்டு வைக்கிறார்

"தமிழ் அம்பலம் ஏறாத வரை மேலே போய்க் கூத்தனை வணங்குவதில்லை என்பது என் கடைப்பிடியாதலின், தமிழ் நிற்கும் கீழே நின்று தொழுது வந்தேன். தமிழ்த் திருமுறைகள் அம்பலத்தின் மேல் ஏற இறைவன் அருள் செய்ய வேண்டும் என்று இறந்து கொண்டேன் (10.11.1986)

“தேவாரத் திருவாசகங்கள் அம்பலத்தின் கீழே தரையில் நின்று பாடப் பெறுகின்றன. பொன்னம்பலத்தில் தமிழ்ப் பாசுரங்களை ஓதுவாரும் பாடக் கூடாது; அன்பர்களும் பாடக் கூடாது. தீட்சிதர்கள் பாடுவதாக இருந்தாலும் கூடக் கிழே இறங்கி வந்து தான் பாட வேண்டும். இது அண்மைக் காலத்து வழுவி வந்த தமிழுக்கு மதிப்பில்லாத வழக்கம். தமிழ்த் திருமுறைகள் அம்பலத்தின் மேல் பாடப் பெற வேண்டும் என்பது எம் வேண்டுகோள். திரு பால சுப்பரமணியம் பேராசிரியர் வெள்ளைவாரணரும் பிற அன்பர்களும் துணையாயினர். இவ்வுரையாடல் முடிய இரவு எட்டு மணியாயிற்று” என்கிறார்.

வ.சுப. மாணிக்கனார் - தற்சிந்தனைகள் -பக் - 98 & 99

அன்னைத் தமிழ்மொழியை அம்பலவானெனின் பொன்னம்பலத் தேற்றும் பொறுப்பு மதித்துப் போற்றுவதற்குரியது

### *வறுமை சுமந்த மாமனிதர் -கூற்றுணர்த்தும் பொருள்:-*

1. வறுமை என்பது இதுவரை, உடுக்க உடை, உண்ண உணவு, இருக்க இடம் இவையில்லாதவரை இவற்றுக்காகப் பிறரை நாடியிருப்பவரை பிறரிடம் இருந்து பெறுபவரையே குறிப்பதாகச் சொல்லப்பட்டு வந்துள்ளது. ஆனால் , “மாணிக்க அறம்” என்ற பகுதியும், வ.சுப.மாணிக்கனாரின் வாழ்வியல் நிகழ்வும் மாற்றுச் சிந்தனையை மறுபரிசீலனை செய்ய வைக்கின்றன.

தற்சிந்தனைகள் - பக் -7

1. வ.சுப.மாணிக்கனார். “1986-ல் விருப்பமுறி(உயில்) எழுதினார். அதில் தம் சொத்துக்களில் ஆறில் ஒரு பங்கினை ஒதுக்கி, மேலைச் சிவபுரியில் ஒரு அறநிலை ஏற்படுத்தவும், அதில் வரும் வருமானத்தினைக் கல்வி, மருத்துவம், நல வாழ்வு, குழந்தை நலன், அஃறிணை உயிர்களின் நலன் முதலான பொது நலங்களுக்குச் செலவிட வேண்டும் என்று எழுதி வைத்து, புதிய வள்ளலாராய்த்

**தன்னை வரலாற்றிற்கு அடையாளம் காட்டியவர் இந்த மாமனிதர்"**

**தற்சிந்தனைகள் - பக் -39**

2. **என அடையாளங் காட்டப்படுகிறார். எனவே, உயில் எழுதும் அளவிற்கு பணக்காரர் என்பது தெளிவு. எவ்வளவோ பல இலக்கங்கள் குடும்பச் செலவிருந்த போதிலும் முறையான வருவாய்கள் என் மானத்தையும் பெருமையையும் காத்திருக்கின்றன" என அவரே கூறியிருப்பதாலும் முரணுரையோ என எண்ணத்தலைப்படுகிறது. மேலும் 15.01.1984-ம் நாள் பதிவில் வாழ்வியல் நிகழ்வாக "மதுரை பல்கலைக் கழகத் துணைவேந்தராக இருந்தபோது கழக ஆண்டுவிழா தலைமையுரை ஆற்ற அழைத்திருந்தோம். நடந்து வந்த அவரிடம் பல்கலைக்கழக வாகனம் உண்டல்லவோ என வினவிய போது "ஆம்" ஆனால் பல்கலைக் கழகப் பணிக்காக நான் வரவில்லையே. எனவே அவ்வாகனத்தைப் பயன்படுத்துதல் தவறு". எனவே பேருந்தில் வந்து பின் காலார நடையின்று வருகிறேன். என்றார் வ.சுப.மாண்ணிக்கனார்"** தகவலாளர் .புலவர் சுப இராமச்சந்திரன் துணைத் தலைவர் மதுரை திருவள்ளுவர் கழகம் - நாள் - அக் 09.10.2016 -மதுரை நேரம் - மாலை -5.00 **என்று மதுரைத் திருவள்ளுவர் கழகத் துணைத் தலைவரும், அப்போதைய துணைச் செயலாளருமாக விளங்கியவர். கூற்றிலிருந்து அவர் வசதிகளைச் சுமக்க. மறுத்ததால் வறுமை சுமந்தவர் என்பது பெறப்படுகிறது. இவரைப் போன்ற அற நடையாளரின் பணியால் அன்றைய தமிழகம் நற்பண்புகளின் கூடாரமாக விளங்கிற்று. இன்று பொதுச் சொத்தை தன் சொத்தாய் நினைத்துச் சுகிப்பவர்களால் அவலஞ் சுமந்த தமிழகமாக மாறிவிட்டது.**

***மாணிக்கச் செம்மலுக்குள் ஒளிந்திருக்கும் ரசனையாளன்*** :-

**வாழ்வின் மகோவுன்னதங்களைத் தொட்டவர்களுக்கும் மனதின் ஓரத்தில் சாமானியராய் வாழ்ந்து தீர்க்கும் பண்பும் அமைந்திருக்கும் என்பதற்கு வ.சுப.மாவும் விதி விலக்கன்று. அவரின் திரைப்பட ஈடுபாடு உணர்த்தி நிற்கிறது. அதனை "செம்மல் திசைப்பாட்டுப் புத்தகங்களையும் பழைய புத்தகக் கடைகளில் வாங்கி**

நிறையச் சேர்த்துள்ளார் ஆராய்ச்சிக்காக அந்நூல்களையும் படிப்பதுண்டு… காரைக்குடியில் ஆண்டுக்கொருமுறை பேராசிரியர் உட்படத் தமிழ்த்துறை ஆசிரியர்கள் அனைவரும் ஒன்றாகச் சென்று படம் பார்ப்பதுண்டு அதனைக் கண்ட பிற துறையாசிரியர்கள் வியப்படைவர், செம்மல் தலைமையில் தமிழ்த்துறை அந்நாளில் ஒரு குடும்பம் போல ஒற்றுமையுற்று ஒளிர்ந்ததற்கு அதுவும் சான்று…….

"தமிழ்க்காதல்" எனும் ஆய்வுநூலில் கண்ணதாசனின் "பாலிருக்கும் பழமிருக்கும் பசியிருக்காது பஞ்சணையில் காற்று வரும் தூக்கம் வராது" எனும் பாடலடிகளைப் பசியட நிற்றல்" "கண்துயில் மறுத்தல்" என்னும் மெய்ப்பாடுகளுக்குச் சான்று காட்டுவார்.

பாண்டியனிடம் வழக்குரைக்கும் கண்ணகி அவன் முன் தன் காற்சிலம்பை உடைக்கிறாள். அதிலிருந்து வெளிப்பட்ட மாணிக்கப்பரல், மன்னன் வாய்முதல் தெறிந்தது - ஆராயாது கள்வன் என்று பொய் கூறிய அரசனது வாயிற்பட்டது என இளங்கோவடிகள் பொருத்தமுற புனைந்து கூறுகிறார். இதற்கு ஒப்புவமையாகப் "பூவிழிவாசலிலே" எனும் திரைப்படத்தின் காட்சி ஒன்றினைக் காட்டிப் பொருத்தமுற விளக்குகிறார். பெற்றோரைப் பிரிந்த ஊமைக் குழந்தையிடம் அதனைப் பலவகையில் காப்பாற்றி வருபவனைக் காட்டி, இவன் தானே கொலை செய்தவன் எனக் காவலன் கேட்க, அக்குழந்தை சினந்து குத்துவாளை எடுத்தெறிய, அது குற்றம் கூறிய அக்காவலனின் வாயைக் கிழித்தது. திரைப்படக் கதையாயினும் இலக்கிய மாயினும் எங்கு சிறப்புற நிகழ்ச்சிகள் கையாளப்படினும் ஏற்றிப் போற்றுவது செம்மலின் இயல்பு"

முனைவர் இரா. சாரங்கபாணி - மாணிக்கச் செம்மல், பக் 56,57

மறுபதிப்பு - 2016 மாணிக்கச் செம்மல் நூற்றாண்டு வெளியீடு.

*காலப்பொருத்தமா? காலனின் லீலைப் பொருத்தமா?*

அன்றைய முதலமைச்சரை அனைவரும் எம்.ஜி.இராமசந்திரன் என அழைக்க, இவர் மட்டும், ம.கொ.இராமசந்திரன் என்று அழைக்கிறார். 08.11.1984 (வியாழக்கிழமை) நாட்டு குறிப்பு ஆய்வாளர்.

தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவர் ம.கொ.இராமச்சந்திரனார் ஒரு மாதமாகப் பெருகிய நோய்களின் வாய்ப்பட்டு ஓரளவு தேறி இப்போது சிறுநீரக வைப்புக்கு அமெரிக்கா சென்றிருக்கின்றார். [அமெரிக்க மருத்துவர்கள் நம் முதல்வருக்கு மருத்துவம் பார்க்க இங்கு வருகின்றனர்] பெருப் கொடையுள்ளமும் நல்ல பல பண்புகளும் மக்கட்டுப் பெரு நலங்களும் நல்லாட்சியும் வாய்ந்த முதல்வரின் உடல் நலம் இன்மை எனக்குப் பெரிய வருத்ததைத் தந்தது. சில நாள் பெருங்கவலையானேன். அவர் முழு நலம் வேண்டிச் சில நாட்கள் ஒருமை வழிபாடு செய்தேன். நல்ல மருத்துவப் பார்வையால் முதல்வர் நலம் சீராக இருக்கின்றது எனவும் கடிய நிலையைக் கடந்து விட்டார் எனவும் உடல் நலம் பெறுவது தெளிவு எனவும் கேட்கக் கேட்க என் உள்ளக் கவலை குறைகின்றது. நான் பண்புக்கும் அன்புக்கும் மதிக்கும் அரசியல் தலைவர்களுள் முதல்வரும் ஒருவர் 18.10.1984 மதுரைப் பல்கலைக்கழகத்தின் விழாவில் என்னைக் கண்டு உங்களுடன் பல செய்திகள் கலந்து பேச எண்ணியிருக்கிறேன்" என்று திரு.எம்.ஜி.ஆர் அவர்கள் கூறியதாகவும் பதிவு செய்துள்ளார்.

வ.சுப.மாணிக்கம் -தற்சிந்தைனைகள் - பக் 53 & 54

இப்பதிவு அவருக்கு தமிழக்கத்தின் தடையற்ற சீரான ஆட்சி மீதும் கொண்டிருந்த அக்கறையைக் காட்டுகிறது.

இலக்கியப் பஞ்சாயத்து :

"சங்கப் புலவர்களில் கபிலர் பெருமான் தமது குறிஞ்சிப்பாட்டு என்ற களவொழுக்கம் பற்றிய நூலினை " ஆரிய அரசன் பிரகதத்தனுக்குத் தமிழறிவித்தற்குப் பாடியதாகக்

குறிப்பிடப்பட்டுள்ளது. ஈண்டும் தமிழ் அறிவித்தல் என்பது தமிழில் சிறப்பாக இடம் பெற்றுள்ள அகத்திணையை அறிப்பதென்பதையே காட்டுகிறது.

ஒப்பிலக்கிய அறிமுகம் என்று இலக்கியப் பஞ்சாயத்தும் நடத்தி உள்ளமை தெளிவு. பக்-24

கிரேக்கமும் தமிழும் ஒன்றுபோல் தோன்றும் பழமையே எனல்

கிரேக்கம் மற்றும் தமிழ் குறித்துக் கருத்துரைக்கும் போது ;

1. "ஆன்லிச்சு என்னும் அறிஞன் பண்டைக் கிரேக்க நாட்டின் வாழ்க்கை" எனப் பெரிய நூலின் முன்னுரையில் எழுதிய கருத்து, பழந்தமிழகம் கண்ட அகத்திணையை ஆராயும் என் கருத்துக்குப்படி எடுத்தது போல இருப்பக் கண்டு வியந்தேன்" -வ.சு.ப.மாணிக்கம் (ஒப்பிலக்கிய அறிமுகம் - தமிழண்ணல் மீனாட்சி புத்தக நிலையம் - மதுரை -09 எட்டாம் பதிப்பு - 2000).
என்று நூலுக்கு எழுதியப் பணியை பதிவு செய்கிறார்.

வ.சு.ப. மாணிக்கனாரின் படைப்பு நோக்கம்:

" மனித சமுதாய முழுவதற்கும் பொதுவாகத் தெரிந்த உண்மைகளையும் தெரியாத உண்மைகளையும், படைப்பாளன் படைத்துக்காட்ட வேண்டும்." டால்சுதாய்

தி.சு.நடராசன் திறனாய்வுக்கலை, என்.சி.பி.எச்-சென்னை, டிசம்பர்-2011.

1. சமுதாய இலட்சியங்கள் (Social ideology)
2. சமுதாய உளவியல் (Social Psychology)

- சர்வதேச உணர்வுகள்
- மொழி
- கலாச்சாரம்
- மக்கள்
- வரலாறு
- மரபுச் சின்னங்கள்

இனம் - நாடு - சாதி - சமயம் - கடந்துவரல் = ஒருமைப்பாட்டுணர்வு.

தேசிய உணர்வு சர்வதேச உணர்வு : மேலோங்குதல் / குறுகிய மனப்பாங்கு ஒழிய

- ❖ மனிதனோடு மனிதனுக்கு இருக்க வேண்டிய பிணைப்பு
- ❖ நாடுகளோடு நாடுகளுக்கு இருக்க வேண்டிய நெருக்கம்
- ❖ கலாச்சாரங்களோடு இருக்க வேண்டிய இணைப்பு

ஆகியன கலை இலக்கியப் பண்பாட்டு நிலையில் சருவதேச உறவுகள் பொதுமைப் பண்புகள், சமதரும நோக்கு ஆகியவற்றை இலக்கியங்களில் எடுத்துரைத்தல் என்பதாக அவரது நற்சிந்தனைகள் அமைகின்றன.

சமூகத்திற்கு விடுக்கும் அறைகூவல் :

சமூகத்தின் மீது கொண்ட அக்கறையாக, “காலவொழுங்கு, ஐம்புலனடக்கிய, கணிசச் செயல், தொடர்ந்து முடித்தல், காமவெகுளி மயக்கமின்மை, குறைவகற்றுதல், எதிரதாக்காத்தல், பணிவும் துணிவும், கலங்காமை, எதனையும் சுமையாகவும் பாரமாகவும் கருதாது இயல்பினும் இயல்பெனக் கருதிச்செய்தல். உணர்ச்சியை அறிவாகமாற்றல் வேகத்திலும் பக்குவச் சிந்தனைச் செயல், பெருமிதவுணர்வு, புகழாசையின்மை, கடமைத்தொண்டுணர்வு, பிறப்பைச் சிறப்பாக்கல் உடல் நலம் மதித்தல், அளவாக உண்ணல், எதனையும் கூடியவரை ஒரே முறையிற் செய்தல், செய்வன ஒரே முறையிற் திருந்தச்செய்தல் என்ன சிந்திக்க வேண்டும், எவற்றைச் சிந்திக்கத் தவறிவிட்டோம். எத்தனை வகையாகச் சிந்தனையோட்டம் வேண்டும்? மறுமறு சிந்தனைகள் வேண்டுமா? தெளிந்த எண்ணம் யாது? செயல் வழிகள் பல எப்போது எதனை பின்பற்ற வேண்டும்? நல்லது என்றும் நிறைவேறும். நிறைவேற்ற முடியும் என்ற நம்பிக்கை. இழப்புகள் வரினும் சோர்வுபடாது ஏற்றுக்கொள்ளல். கருத்துகள்; வேறுபட்டாலும் ஆட்பகை கொள்ளாமை, கடப்போ வெறுப்போ மிடுமென்றால் உறவைக் குறைத்துவாய் வாளாதிருத்தல், சிறுமைகளைப் பொருட்படுத்தாமை உயர் எண்ணங்கட்குப் பதிலளித்தல்.

என்றும் வாழ்வோம், வளர்வோம், முன்னேறுவோம், புதியன, புரட்சியென காண்போம் மாற்றிக்கொள்வோம் திருத்திக்கொள்வோம் என்ற அதிக நம்பிக்கை கூடியவரை அளந்து பேசல், அளவாகப் பாராட்டல், எப்போதும் தன்னைத் திறன் செய்து கொள்ளுதல், தன்னைத் தானே கண்டித்துக் கொள்ளுதல் - வ.சுப.மா.நற்சிந்தனை - ப 45 எனும் இவை ஆளுமைத்திறன் பயிற்றுநர்க்கும் பயில்பவர்க்கும் தரும் அழியாத ஆலோசனைகளாகத் திகழ்கின்றன.

தமிழ்ச் சமூக குறிக்கோள் / இலக்கு :-

தன் வாரிசுகளுக்கும் கருத்துரைக்கிறார், “இப்பிள்ளைகள் எந்நிலைக்கிடையிலும் தங்கள் தமிழறிவை எழுத்துக்கும் பேச்சுக்கும் வளர்த்துக்கொள்ள வேண்டும், தொல்காப்பியம் சில சங்க இலக்கியங்கள், திருக்குறள், சிலப்பதிகாரம், மணிமேகலை, பெரியபுராணம், இராமாயணம், திருவாசகம், பாரதி கவிதைகள், சிறு அற நூல்கள் இவற்றில் ஓரளவெனும் பயின்றால் வருவாயும் நன்மதிப்பும் செல்வாக்குக் கூடுதலாகப் பெறலாம், இவர்கள் வழிக் குழந்தைகளும் பிற எத்துறைகள் கற்றுத் தொழில் செய்தாலும், தமிழிலக்கியக் கல்வி ஓரளவேனும் குடும்பக் கடமையாக, குடும்பமாகச் செல்ல வேண்டும். என் குடும்பத்துக்கு நான் சொல்வது தமிழினத்துக்கும் பொருந்தும், தமிழ்ப்பணி, தமிழித்தொண்டு, தமிழாக்கம், தமிழன் வாழ்வில் இயல்புக் கடனாகும்.

**-தற்சிந்தைனைகள் - ப 47**

இக்கருத்துகள் தன் வாரிசுகளுக்குக் கூறினாலும் தலைமுறை தலைமுறையாகத் தமிழ்க்குடும்ப வாரிசுகள் அனைத்துக்கும் ஆன்ம ஈடேற்றத்துக்கும் சொன்ன அருமருந்தாம் அவசியக் கருத்துகள் தமிழினத்திற்கான பொதுமைச் சிந்தனை போற்றி வளர்த்தால் ஏற்றம் பெறுவது வருங்காலத் தமிழ்ச் சமூகமே!

## ஆய்வு முடிவுகள்

- திட்டமிட்டு தமிழ் செய்தவர்
- தமிழைப் பொன்னம்பலம் ஏற்றப் பாடுபட்டவர்
- இலக்கியப் பஞ்சாயத்து செய்தவர்

- தமிழ்ச் சமூகம் & மானுடப் பொதுமைக்கு வழிகாட்டியவர்
- எனவே அவரது வாழ்வு பயன்பட வாழ்ந்த வாழ்வு; பார் புகழும் வாழ்வு; பின்பற்ற வேண்டிய வாழ்வு என்ற வ்கையில் வாழுகின்ற மக்களுக்கு வாழ்ந்த பாடமாக விளங்கியவர் வ.சு.ப.மாணிக்கனார் என்பது தெளிவு.
- அவர் சேர்த்து வைத்த சிந்தனையெனும் புண்ணியந்தமிழ்ச் சந்ததியைக்காக்கும் என்பதில் ஐயமில்லை.

**(1917 - 2017 எம் கல்லூரியில் நடைபெற்ற மூதறிஞர் செம்மல் வ.சுப.மாணிக்கனார் நூற்றாண்டு விழாவில் வாசித்தளிக்கப்பட்ட கட்டுரை.)**

## சான்றாதாரங்கள்:

1. மாணிக்கச்செம்மல் - இரா.சாரங்கபாணி
2. ஒப்பிலக்கிய அறிமுகம் - தமிழண்ணல்
3. திறனாய்வுக் கலை - தி.சு.நடராசன்
4. தற்சிந்தனைகள் - வ.சுப.மாணிக்கனார்